அசல் வழக்கு எண். **255/2018,** பி.வா.சா.**1,** செல்லையா, த/பெ.வேலு

தேதி **24.10.2024**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை **:**

நானும் வாதியும் ஒரே ஊரில் வசித்து வருகிறோம். வாதி என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியும். வாதிக்கு பாப்பான்பட்டி கிராமம்தான் சொந்த ஊர் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண்.363/24 ஆகும். வழக்கு சொத்தின் நான்கெல்லை தெரியும். வடக்கில் ரெங்கன் நிலமும், தெற்கில் சாலையும், மேற்கில் கிருஷ்ணகுமாரின் நிலமும், கிழக்கில் கோகிலம் நிலமும் உள்ளது. வழக்கு சொத்தின் பரப்பளவு எவ்வளவு என்றால் 20 சென்ட் ஆகும். வழக்கு சொத்திலிருந்து எனது வீடு எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. வழக்கு சொத்து எனக்கு சொந்தமானது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்திற்கு வருவாய் ஆவணங்கள் என்ன வகைப்பாடு காட்டப்பட்டுள்ளது என்றால் நன்செய் வயல் ஆகும்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது. )